## அலகு 3 விளிமரபு செய்திகள்

**விளிமரபு** சொல்லதிகாரத்தில் நான்காவது இயலாகும்.

தொல்காப்பியருக்கு முன் வாழ்ந்தவர்கள் வேற்றுமையை ஏழு பிரிவாக்கிக் கண்டனர். தொல்காப்பியர் விளி வேற்றுமையையும் சேர்த்து வேற்றுமை எட்டு என்று காட்டியுள்ளார். எனவே இவர் புகுத்திய எட்டாவது விளி-வேற்றுமைக்குத் தனி இயல் ஒன்றை வைத்துக்கொண்டு விளக்குகிறார்.

பெயரை அழைப்பது அல்லது கூப்பிடுவது விளி-வேற்றுமை. இது எட்டாம் வேற்றுமை.
இந்த விளி வேற்றுமைக்கு உருபு இல்லை. இந்த வேற்றுமையில் பெயர் தன் இயல்பு நிலையிலேயே இருக்கும். அல்லது திரியும்போது, ஈறு திரிதல், ஈற்றயல் திரிதல், பிறிது வந்து அடைதல் ஆகிய மூன்று மாற்றங்கள் நிகழும்.

வழக்கம்போல் தொல்காப்பியர் சொற்களை உயர்திணை, அஃறிணை எனப் பாகுபடுத்திக் கொண்டும், உயிரீறு, மெய்யீறு என்று பாகுபடுத்திக் கொண்டும் விளிகொள்ளும் பாங்கை விளக்குகிறார். இங்கு அவர் குறிப்பிட்டுள்ள பொருள் நோக்கில் பாகுபாடு செய்துகொண்டு தொகுத்துப் பார்க்கிறோம். (எந்த நூற்பாவில் செய்தி உள்ளது என்பது இங்கு எண்ணிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

விளி கொள்ளும் பெயர் மட்டுமே விளி ஏற்கும் -1- விளி கொள்ளும் பாங்கை இனிக் காணலாம் -2-

### பொருளடக்கம்


- 1உயர்திணை
  - 1.1அளபெடைப் பெயர்
  - 1.2அண்மை விளி
  - 1.3சேய்மை
  - 1.4ஈற்றயல் நீட்டம்
  - 1.5தொழில்-பெயர்
  - 1.6பண்புப்பெயர்
  - 1.7முறைப்பெயர்
- 2விளி ஏலாப் பெயர்கள்


### விளிஏற்கும் உயர்திணைப் பெயர்கள்

உயிர்-இறுதி

உயர்திணையில் இ உ ஐ ஓ எழுத்தில் முடியும் உயிரிறுதிச் சொற்கள் மட்டுமே விளி கொள்ளும். -3-
இ என்பது ஈ ஆகும் -4- நம்பி - நம்பீ
ஐ என்பது ஆய் ஆகும் -4- நங்கை – நங்காய்
ஓ என்பது ஏ ஏற்கும் -5- கோ - கோவே
உ எனபது ஏ ஏற்கும் -5- வேந்து – வேந்தே
இங்கு உ எழுத்து குற்றியலுகரம் -6-
இந்த 4 எழுத்து அல்லாமல் பிற எழுத்துக்கள் உயர்திணையில் விளி ஏலா -7-
இ இறுதி அளபெடை கொள்ளும் -8- தோழி – தோழீஇ
(கணி – கணியே என்பதில் கணி என்பது பட்டப்பெயர்)

மெய்-இறுதி

உயர்திணையில் ன ர ல ள ஒற்றில் முடியும் சொற்கள் விளி ஏற்கும் -11-
அன் இறுதி ஆ ஆகும் -13- சோழன் – சோழா, சேர்ப்பன் – சேர்ப்பா

### அளபெடைப் பெயர்

அளபெடைப்பெயர் அளபெடையாக விளி கொள்ளும் -18-
அழாஅன் (=அழல் மூட்டிச் சுடுபவன்), புழாஅன் (=புழை என்னும் குகையில் வாழ்பவன்)
மகாஅர், சிறாஅர் – அளபெடைப்பெயர் -24-
'மகாஅளின் நிறம் போல் மழை' – அளபெடைப்பெயர் இயல்பு -32-

### அண்மை விளி

உயிர்-இறுதி
நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, தோழி வாழி, அன்னை வாழி (இயல்பு) -10-
மெய்-இறுதி

அண்மை விளி ஆயின் அன் இறுதி அ ஆகும் -14- ஊரன் – ஊர, சேர்ப்பன் – சேர்ப்ப

**சேய்மை**

நம்பீ சாத்தா -35-
அம்மா சாத்தா -36-

**ஈற்றயல் நீட்டம்**

ஈற்றயல் நீட்டச் சொல்
ஆன் இறுதி இயற்கையாகும் -15- சேரமான், மலையமான்
எம்மான், கோமான் -28-
ஈற்றயல் நீடும் சொல்
குரிசில் – குரிசீல், தோன்றல் – தோன்றால் (ஈற்றயல் நீட்டம்) -27-
பார்ப்பார் – பார்ப்பீர் (ஆர் – ஈர்) -21-
கூத்தர் – கூத்தீர் (அர் – ஈர்) -21-

**தொழில்-பெயர்**

ஆன் இறுதி ஆய் ஆகும் - உண்டான் – உண்டாய்! -16-
உண்டார் – உண்டீரே (ஆர் – ஈர்+ஏ) -22-
உண்டாள் – உண்டாய் -29-

**பண்புப்பெயர்**

ஆன் இறுதி ஆய் ஆகும் - கரியான் – கரியாய்! -17-
செய்யார் – செய்யீரே (ஆர் – ஈர்+ஏ) -23-
கரியாள் – கரியாய் -29-

**முறைப்பெயர்**

ஐ இறுதி ஆ ஆகும் - அன்னை – அன்னா -9-
ஏ கொள்ளும் - மகன் – மகனே! -19-
மகள் – மகளே -30-

**விளி ஏலாப் பெயர்கள்**

உயர்திணையில் ன ர ல ள அல்லாத ஒற்றில் முடியும் சொல் விளி கொள்ளாது -12-
தான், யான், -20-
நீயிர், -26-
அவன், இவன், உவன், யாவன்(எவன்) -20-
அவர், இவர், உவர் –-25-
யாவர் –-26-
அவள், இவள், உவள், யாவள் –-31-
நமன், நமள், நமர் -37-
நுமன், நுமள், நுமர் -37-
தமன், தமள், தமர் -37-
எமன், எமள், எமர் -37-
தம்மான், எம்மான், நும்மான் – போன்றவை. -37-

**விளிமரபு நூற்பாக்கள்**

விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப. 1
அவ்வே,
இவ் என அறிதற்கு மெய் பெறக் கிளப்ப. 2
அவைதாம்,
இ உ ஐ ஓ என்னும் இறுதி
அப் பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப் பொருள் சுட்டிய விளி கொள் பெயரே.3
அவற்றுள்,
இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும். 4
ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும். 5
உகரம்தானே குற்றியலுகரம். 6

ஏனை உயிரே உயர்திணை மருங்கின்
தாம் விளி கொள்ளா என்மனார் புலவர். 7

அளபெடை மிகூஉம் இகர இறு பெயர்
இயற்கைய ஆகும் செயற்கைய என்ப. 8

முறைப்பெயர் மருங்கின் ஐ என் இறுதி
ஆவொடு வருதற்கு உரியவும் உளவே. 9

அண்மைச் சொல்லே இயற்கை ஆகும். 10

ன ர ல ள என்னும் அந் நான்கு என்ப
புள்ளி இறுதி விளி கொள் பெயரே. 11

ஏனைப் புள்ளி ஈறு விளி கொள்ளா. 12

அன் என் இறுதி ஆ ஆகும்மே. 13

அண்மைச் சொல்லிற்கு அகரமும் ஆகும். 14

ஆன் என் இறுதி இயற்கை ஆகும். 15

தொழிலின் கூறும் ஆன் என் இறுதி
ஆய் ஆகும்மே விளிவயினான. 16

பண்பு கொள் பெயரும் அதன் ஓரற்றே. 17

அளபெடைப் பெயரே அளபெடை இயல. 18

முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே. 19

தான் என் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யான் என் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளி கோள் இலவே. 20

ஆரும் அருவும் ஈரொடு சிவணும். 21

தொழிற்பெயர் ஆயின் ஏகாரம் வருதலும்
வழுக்கு இன்று என்மனார் வயங்கியோரே. 22

பண்பு கொள் பெயரும் அதன் ஓரற்றே. 23

அளபெடைப் பெயரே அளபெடை இயல. 24

சுட்டுமுதற் பெயரே முன் கிளந்தன்ன. 25

நும்மின் திரிபெயர் வினாவின் பெயர் என்று
அம் முறை இரண்டும் அவற்று இயல்பு இயலும். 26

எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே

நின்ற ஈற்று அயல் நீட்டம் வேண்டும். 27

அயல் நெடிது ஆயின் இயற்கை ஆகும். 28

வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆள் என் இறுதி
ஆய் ஆகும்மே விளிவயினான. 29

முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல. 30

சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முன் கிளந்தன்ன என்மனார் புலவர். 31

அளபெடைப் பெயரே அளபெடை இயல. 32

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்கும் காலை. 33

புள்ளியும் உயிரும் இறுதி ஆகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளி நிலை பெறூஉம் காலம் தோன்றின்
தெளி நிலை உடைய ஏகாரம் வரலே. 34

உள எனப்பட்ட எல்லாப் பெயரும்
அளபு இறந்தனவே விளிக்கும் காலை
சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான. 35

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம் முறைப்பெயரொடு சிவணாது ஆயினும்
விளியொடு கொள்ப தெளியுமோரே. 36

த ந நு எ என அவை முதல் ஆகித்
தன்மை குறித்த ன ர ள என் இறுதியும்
அன்ன பிறவும் பெயர் நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே. 37

**தொல்காப்பியம் பெயரியல் செய்திகள்**

உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் பெயர், வினை என்னும் சொல் பாகுபாடு உண்டு. இயற்கைப் பொருள்களுக்கும் செயற்கைப் பொருள்களுக்கும் மொழி பெயரிட்டு வழங்குகிறது. இது பெயர். பெயரின் இயக்கம் வினை.

தமிழிலுள்ள பெயர்ச்சொற்களை விளக்குவது **பெயரியல் ஆகும்**. இது தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் ஐந்தாவது இயல். இதில் சொல்லப்படும் செய்திகள் நூற்பா வரிசையெண் குறிப்புடன் இக்கட்டுரையில் தொகுக்கப்பட்டுள்ளன.

**பொருளடக்கம்**

- 1பொதுச் செய்தி
- 2உயர்திணை
- 3அஃறிணை
- 4அஃறிணை விரவுப்பெயர்

- 5பெயர்ச்சொல் வகைப்பாடு

**பொதுச் செய்தி பெயரின் இலக்கணம், சொல்லின் இயல்பு விளக்கம்**

மொழியிலுள்ள எல்லாச் சொல்லுக்கும் பொருள் உண்டு -1-

பொருளைத் தெரிவித்தல், சொல்லைத் தெரிவித்தல் ஆகியவை சொல்லின் செயல் -2-

**பொருள் தெரிவித்தல்**

சாத்தன் வந்தான் (பெயர், வினை), அணங்குகொல் (கொல் – இடைச்சொல்), உறுபொருள் கொடுத்தான் (உறு – உரிச்சொல்)

**சொல்லைச் சுட்டல்**

மரப்பெயர்க் கிளவி (பெயர்), செய்து என் கிளவி (வினை), தஞ்சக் கிளவி (இடை), கடி என் கிளவி (உரி)

**பொருள் தோன்றும் நிலை**

சொல்லின் செயலானது தெரிபுவேறு நிலையல், குறிப்பில் தோன்றல் எனப் பொருள்-தோன்று-நிலை இரு வகைப்படும் -3-

**தெரிபு வேறு நிலையல்**

அவன், இவன், சென்றான், வந்தான்

**குறிப்பில் தோன்றல்**

ஒருவர் வந்தார் (ஆணோ, பெண்ணோ), உணவில் உள்ள கல்லைக் கடித்த ஒருவன் 'கல்லோடு நன்கு சமைத்துள்ளாய்' என்னும்போது 'நன்றாகச் சமைக்கவில்லை' என்னும் பொருள் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

சொல்லின் வகைகள்: பெயர், வினை என்று சொல் இரண்டு வகைப்படும் -4-

அவற்றின் வழியே இடைச்சொல், உரிச்சொல் ஆகியவை தோன்றும் -5-

உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல், இருதிணைக்கும் உரிய சொல் –எனப் பெயர்ச்சொல் 3 வகைப்படும் -6-

இரு திணைக்கு உரிய சொற்கள் 5 பாலில் வரும் -7-

**உயர்திணை**

பால் அறிய வந்த உயர்திணைச் சொற்கள் 15 -8-

1. அவன்,
2. இவன்,
3. உவன் – இவை மூன்றும் ஆண்பால்
4. அவள்,
5. இவள்,
6. உவள் – இவை மூன்றும் பெண்பால்
7. அவர்,
8. இவர்,
9. உவர் – இவை மூன்றும் பலர்பால்
10. யான்,
11. யாம்,
12. நாம்
13. யாவன்,
14. யாவள்,
15. யாவர்

மேலும் 15 சொற்கள் உயர்திணைக்கு உரியவை -9-

1. ஆண்மகன்,
2. பெண்மகள்,
3. பெண்டாட்டி,
4. நம்பி,
5. நங்கை,
6. மகன்,
7. மகள்,
8. மாந்தர்,
9. மக்கள்
10. ஆடூஉ,

11. மகடூஉ,
12. அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்,
13. அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான்,
14. அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு,
15. பொன்னன்னான், பொன்னன்னாள், பொன்னன்னார் – போன்று வருபவை.

மேலும் இவை உயர்திணைக்கு உரியவை -10-
1. எல்லாரும்
2. எல்லீரும்
3. பெண்மகன்

மேலும் இவை உயர்திணைக்கு உரியவை -11-
1. நிலப்பெயர் – அருவாளன், சோழியன்
2. குடிப்பெயர் – மலையமான், சேரமான்
3. குழுவின் பெயர் – அவையத்தார்,
4. வினைப்பெயர் – தச்சன், கொல்லன்
5. உடைப்பெயர் – அம்பர் கிழான், போரூர் கிழான், வெற்பன், சேர்ப்பன்
6. பண்புகொள் பெயர் – கரியான், செய்யான்
7. பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயர் – தந்தையர், தாயர்
8. பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயர் – பெருங்காலர், பெருந்தோளர்
9. பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயர் – ஆயர், வேட்டுவர்
10. கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் – பட்டி, கூத்தர்
11. இன்று இவர் என்னும் எண்ணியல்-பெயர் – இருவர், நாஆல்வர், பதின்மர்

அன்ன பிற -12-
ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், வண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் – தொடக்கத்தன.

**அஃறிணை**

பால் அறிய வந்த அஃறிணைப் பெயர்கள் 15 -13-
அது, இது, உது
அஃது, இஃது, உஃது
அவை, இவை, உவை
அவ், இவ், உவ்
யாது, யா, யாவை

மேலும் 9 அஃறிணைப் பெயர் -14-
பல்ல, பல, சில (தம்மை உணர்த்தி நின்றன) -3
உள்ள, இல்ல (தம்மை உணர்த்தி நின்றன) -2
வருவ, செல்வ –வினைப்பெயர்க் கிளவி- -1
கரிது, கரிய -பண்புகொள் பெயர் -1
ஒன்று, பத்து –எண்ணுக்குறிப் பெயர் -1
பொன்னன்னது, பொன்னன்ன –ஒப்பினாகிய பெயர் -1 (ஆக மொத்தம் 9)
'கள்'ளொடு சிவனும் பெயர் பல-அறி சொல்லாக வரும் -15-
ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் – தொடக்கத்தன.
இனத்தைக் குறிக்கும் இவை ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவானவை.
தொல்காப்பியல் இவற்றை 'இயற்பெயர்' என்று குறிப்பிடுகிறார்.
(உரையாசிரியர் இளம்பூரணர் இவற்றைச் 'சாதிப்பெயர்' என்று குறிப்பிடுகிறார்)
பல-அறி சொல்
ஆக்கள், குதிரைகள், மலைகள்
அன்ன பிற -16-
பிறிது, பிற, மற்றையது, மற்றையவை, பல்லவை, சில்லவை, உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன – என்னும் தொடக்கத்தன

**அஃறிணை விரவுப்பெயர்**

அஃறிணை விரவுப்பெயர் வினையொடு வரும்போது பால் உணர்த்தும் -17-
ஆ வந்தது, குதிரை வந்தது – ஒருமை
ஆ வந்தன, குதிரை வந்தன – பன்மை

விரவுப்பெயர் (இரு திணையிலும் வரும் பெயர்) வினையொடு வரும்போதுதான் பால் உணர்த்தும் -18-
சாத்தன் வந்தான், முடவன் வந்தான் – உயர்திணை
சாத்தன் வந்தது, முடவன் வந்தது – அஃறிணை
செயல்படுவதாலும் பால் உணரப்படும் -19-
சாத்தன் யாழ் இசைக்கும்
சாத்தி சாந்து அரைக்கும்

**பெயர்ச்சொல் வகைப்பாடு**

பெயர்ச்சொல் 10 வகை இயற்பெயர் 4, சினைப்பெயர் 4, முறைப்பெயர் 2 (நூற்பா 20 முதல் 25)
ஆண்பெயர், பெண்பெயர், ஒன்றன் பெயர், பலவற்றின் பெயர் என இயற்பெயர் 4 வகை
ஆண் சினைப்பெயர், பெண் சினைப்பெயர், ஒன்றன் சினைப்பெயர், பலவற்றின் சினைப்பெயர், எனச்

**சினைப்பெயர் 4 வகை**

ஆண் முறைப்பெயர், பெண் முறைப்பெயர் என முறைப்பெயர் 2 வகை
பெண்பெயர் ஒருத்திக்கும், ஒன்றன் சினைப்பெயருக்கும், ஒன்றன் முறைப்பெயருக்கும் பொது -26-
சாத்தி வந்தாள், சாத்தி வந்தது - இயற்பெயர்
முடத்தி வந்தாள், முடத்தி வந்தது - சினைப்பெயர்
முடக்கொற்றி வந்தாள், முடக்கொற்றி வந்தது – ஒன்றன் சினைப்பெயர்
தாய் வந்தாள், தாய் வந்தது –ஒன்றன் முறைப்பெயர் என வரும்

**ஆண் பெயர் -27-**

சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது
முடவன் வந்தான், முடவன் வந்தது
முடக்கொற்றன் வந்தான், முடக்கொற்றன் வந்தது
தந்தை வந்தான், தந்தை வந்தது என வரும்.

**பன்மைப் பெயர்**

பன்மைப்பெயர் ஒன்றன்-பாலுக்கும், பலவின்-பாலுக்கும், ஒருவருக்கும் உரிமை பெற்று வரும் -28-
யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள்
நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள்
பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள்

**ஒருமை சுட்டிய பெயர்**

ஒருமைச் சுட்டிய பெயர் ஒன்றற்கும், ஒருவர்க்கும் பொருந்தும் -29-
கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள்
சொவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள்
நெடும்புற மருதி வந்தது, நெடும்புற மருதி வந்தான், நெடும்புற மருதி வந்தாள்

**தாம், தான், எல்லாம் என்ற பெயர்கள்**

தாம் என்பது பன்மைக்கு உரியது -30-
தாம் வந்தார், தாம் வந்தன
தான் என்பது ஒருமைக்கு உரியது -31-
தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது
எல்லாம் என்பது மூவிடத்துக்கும் உரியது -32-
எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார்
உயர்திணையில் தன்னை உள்ளிட்ட பன்மைக்கே இது உரியது. படர்க்கைப் பன்மைக்கு எல்லாம் என்னும் சொல் வரக்கூடாது. -33-
(ஆனால் இக்காலத்தில் யானையெல்லாம் வந்தன என்று வழங்கிவருகிறோம்)

**நீயிர், நீ என்ற சொற்கள்**

நீயிர், நீ என்னும் சொற்களுக்குப் பால் இல்லை -34-
நீயிர் வந்தீர், நீ வந்தாய்
நீ ஒருமைக்கு உரியது -35-
நீயிர் பன்மைக்கு உரியது -36-

**ஒருவர் என்ற சொல்**

ஒருவர் என்னும் சொல் ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் உரியது -37-

ஒருவர் என்னும் சொல் தன்மையை உணர்த்துமானால் அப்போது அது பன்மை -38-
இவற்றையெல்லாம் உன்னிப்பாக முன்னத்தால் உணர்ந்துகொள்ள வேண்டும் -39-
பெண்மகன் என்னும் சொல் பெண்மகன் வந்தாள் என்று சொல்லப்படும் -40-

**செய்யுளில் ஆன் ஈறு, ஓன் ஈறு**

செய்யுளில் ஆன்-ஈறு ஓன்-ஈறு ஆகும் -41-
வில்லான் – வில்லோன்
செய்யுளில் இறைச்சிப்பொருளை (கருப்பொருளை)ச் சுட்டும் பெயர் உயர்திணையை உணர்த்தாது -42-
கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை வந்த வன்பறழ்க் குமரி
இதில் கடுவன், முதுமகன், மூலன், குமரி என்னும் சொற்கள் உயர்திணை அன்று.
கடுவன் என்பது ஆண் குரங்கையும், மூலன் என்பது பெண்குரங்கையும், குமரி என்பது குரங்குக் குட்டியையும் உணர்த்துகின்றன.

**பெயரியல் நூற்பாக்கள்**

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. 1
பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்

சொல்லின் ஆகும் என்மனார் புலவர். 2

தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இரு பாற்று என்ப பொருண்மை நிலையே. 3

சொல் எனப்படுப பெயரே வினை என்று
ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே. 4

இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்று வழி மருங்கின் தோன்றும் என்ப. 5

அவற்றுள்,
பெயர் எனப்படுபவை தெரியும் காலை
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம் மூ உருபின தோன்றல் ஆறே. 6

இரு திணைப் பிரிந்த ஐம் பால் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயினான. 7

அவ்வழி,
அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்
யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொடு அப் பதினைந்தும்
பால் அறி வந்த உயர்திணைப் பெயரே. 8

ஆண்மை அடுத்த மகன் என் கிளவியும்
பெண்மை அடுத்த மகள் என் கிளவியும்
பெண்மை அடுத்த இகர இறுதியும்
நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்

முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்
சுட்டு முதல் ஆகிய அன்னும் ஆனும்
அவை முதல் ஆகிய பெண்டு என் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப் பதினைந்தும் அவற்று ஓரன்ன. 9

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகன் என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர். 10

நிலப் பெயர் குடிப் பெயர் குழுவின் பெயரே
வினைப் பெயர் உடைப் பெயர் பண்பு கொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறை நிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினை நிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயரே
கூடி வரு வழக்கின் ஆடு இயற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரொடு
அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே. 11

அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த
என்ன பெயரும் அத் திணையவ்வே. 12

அது இது உது என வரூஉம் பெயரும்
அவை முதல் ஆகிய ஆய்தப் பெயரும்
அவை இவை உவை என வரூஉம் பெயரும்
அவை முதல் ஆகிய வகரப் பெயரும்
யாது யா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றொடு அப் பதினைந்தும்
பால் அறி வந்த அஃறிணைப் பெயரே. 13

பல்ல பல சில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப் பெயர்க் கிளவியும் பண்பு கொள் பெயரும்
இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட
அப் பால் ஒன்பதும் அவற்று ஓரன்ன. 14

கள்ளொடு சிவணும் அவ் இயற்பெயரே
கொள் வழி உடைய பல அறி சொற்கே. 15

அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த
என்ன பெயரும் அத் திணையவ்வே. 16

தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே. 17

இரு திணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்
திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்
நினையும் காலை தம்தம் மரபின்
வினையொடு அல்லது பால் தெரிபு இலவே. 18

நிக ழூஉ நின்ற பலர் வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயினான. 19

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடும் கொளலே. 20

அவற்றுள்,
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கு என மொழிமனார் சினைமுதற்பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டு ஆகும்மே
ஏனைப் பெயரே தம்தம் மரபின. 21

அவைதாம்,
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று
அந் நான்கு என்ப இயற்பெயர் நிலையே. 22

பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயர் என்று
அந் நான்கு என்ப சினைப்பெயர் நிலையே. 23

பெண்மை சுட்டிய சினைமுதற்பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற்பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர் என்று
அந் நான்கு என்ப சினைமுதற்பெயரே. 24

பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயர் என்று
ஆயிரண்டு என்ப முறைப்பெயர் நிலையே. 25

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே. 26

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே. 27

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்று இப் பாற்கும் ஓரன்னவ்வே. 28

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே. 29

தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே. 30

தான் என் கிளவி ஒருமைக்கு உரித்தே. 31

எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்து ஆகும்மே 32

தன் உள்ளுறுத்த பன்மைக்கு அல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை. 33

நீயிர் நீ என வரூஉம் கிளவி
பால் தெரிபு இலவே உடன் மொழிப் பொருள. 34

அவற்றுள்,
நீ என் கிளவி ஒருமைக்கு உரித்தே. 35

ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே. 36

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இரு பாற்கும் உரித்தே தெரியும் காலை. 37

தன்மை சுட்டின் பன்மைக்கு ஏற்கும். 38

இன்ன பெயரே இவை எனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல். 39

மகடூஉ மருங்கின் பால் திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயினான. 40

ஆ ஓ ஆகும் பெயருமார் உளவே
ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே. 41

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கின் தோன்றலான. 42

திணையொடு பழகிய பெயர் அலங்கடையே. 43

## அலகு 5 தொல்காப்பியம் எச்சவியல் - செய்திகள்

தமிழின் இலக்கணம் கூறும் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுப்பாக உள்ளது. ஒவ்வொரு பகுப்பிலும் 9 உட்பிரிவுகள் உள்ளன. **எச்சவியல்** சொல்லதிகாரத்தில் ஒன்பதாவது உட்பிரிவு.

முதலாவது கிளவியாக்கம் என்னும் இயல் வாக்கிய அமைப்பை விளக்குகிறது. அடுத்து வரும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்றும் பெயர் எழுவாயாக நின்று பயனிலை கொள்ளும்போது வேறுபடும் வேற்றுமைப் பாங்கினை உணர்த்துகின்றன. அடுத்து சொல் நான்காக வகைப்படுத்தப்பட்டு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் பகுப்புகளில் விளக்கப்படுகின்றன.

ஒன்பதாவதாக உள்ள இந்த இயலில் மொழியானது செய்யுள், வழக்கு என்று பாகுபடுத்தப்பட்டு விளக்கப்படுகிறது. மேலும் முந்தைய 8 இயல்களில் அடங்கி வராத செய்திகளும் கூறப்படுகின்றன.

விளக்கங்கள் இவ்வியலின் நூற்பா வரிசையெண்ணுடன் அமைக்கப்படுள்ளன.

மேற்கோள்கள் பெரும்பான்மை தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரைத் தழுவித் தரப்பட்டுள்ளன. சேனாவரையர் காட்டும் இடம்பெற்றுள்ளது.

குறிப்பு

தொல்காப்பியரே எண்ணிட்டுப் பகுத்துக் காட்டியனவற்றிற்கு வரிசை எண்ணிட்டும், ஏனைய விரிவுகளுக்கு உடுக்குறி இட்டும் விளக்கப்பட்டுள்ளன.

**பொருளடக்கம்**


- 1செய்யுள் ஈட்டச்சொல்
- 2செய்யுளில் தொடர் அமைதி
- 3சொல், இலக்கணப் பார்வை
    - 3.1தொகைச்சொல்
    - 3.2சொல் வேறு, குறிப்பு வேறு
    - 3.3அடுக்குத்தொடர்
    - 3.4எச்சம்
    - 3.5மறைக்கும் சொல்
    - 3.6மூவிடச்சொல், வரையறை
- 4இலக்கணத்தில் கட்டுப்படாத மொழி வரவு
- 5கருவிநூல்
- 6மேற்கோள்


### செய்யுள் ஈட்டச்சொற்கள் 4

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றைச் செய்யுள் ஈட்டிக்கொள்ளும் -1-

இயற்சொல் என்பது செந்தமிழ் நிலத்து வழக்கினை ஒட்டிப் பொருள் பொருள் பயக்கும் -2-

திரிசொல் என்பது 2 வகை -3-

1. ஒருபொருள் குறித்த வேறுசொல்
2. வேறுபொருள் குறித்த ஒருசொல்

திசைச்சொல் செந்தமிழ் சேர்ந்த 12 நிலத்தினும் பொருள்குறிப்பினை உடையவை -4-

வடசொல் என்பது வட-எழுத்தை நீக்கித் தமிழில் எழுதப்படுவது -5-

வடசொல் சிதைந்தும் வரும் -6-

வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் – ஆகியவை நான்குவகைச் சொல்லிலும் செய்யுளில் நாட்டப்படும் -7-

### செய்யுளில் தொடர் அமைதி
### பொருள்கோள் வகைகள்

மொழிபுணர் இயல்பு 4 வகை.

நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்பன அவை -8-

பெயரிலும், வினையிலும் சொற்களைத் தனித்தனியை நிறுத்திப் பொருள்கொள்ள வைப்பது **நிரல்நிறை** -9-

ஈரடி எட்டுச் சீர்களில் சொற்களைத் துணித்து வேண்டிய இடத்தில் ஒட்டிக்கொள்ளுமாறு செய்யுள் இயற்றுதல் – **சுண்ணம்** - 10-
சீர்நிலை திரியாமல் அடிகள் இடம்-மாறும்படி அமைத்தல் **அடிமறி** -11-
அடிமறியில் ஈற்றடியை எங்கு நிறுத்தினும் பொருள் மாறுபடாது -12-
சொற்களை இடம் மாற்றி இணைத்துப் பொருள் கொள்வது **மொழிமாற்று** -13-

**சொல், இலக்கணப் பார்வை**

**பிரிக்கப்படக் கூடாத பெயர்கள் -14-**

- தமன், தமள், தமர்
- நமன், நமள், நமர்
- நுமன், நுமள், துமர்
- எமன், எமள், எமர் ஆகியவை பிரிக்க இயலாத சொற்கள் ஆகும்.

**ஒருசொல் அடுக்கு (அடுக்குத்தொடர்) 3 வகை -15-**

1. ஏஎஎ வம்பன் மொழிந்தனன் – இசைநிறை (செய்யுளில் மட்டும் வரும்)
2. ஒக்கும் ஒக்கும், மற்றோ மற்றோ, - அசைநிலை
3. பாம்பு பாம்பு, தீத்தீ – பொருளொடு புணர்தல்

**தொகைச்சொல்**

தொகைமொழி 6 வகை -16-

1. வேற்றுமைத்தொகை
2. உவமைத்தொகை
3. வினைத்தொகை
4. பண்புத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை -17-

1. நிலம் கடந்தான் (நிலத்தைக் கடந்தான்)
2. தாய் மூவர் (தாயுடன் மூவர்)
3. கருப்புவேலி (கரும்புக்கு வேலி)
4. வரைவீழ் அருவி (வரையிலிருந்து வீழ் அருவி)
5. யானைக்கோடு (யானையது கோடு)
6. குன்றக் கூகை (குன்றின்கண் கூகை)

வினைத்தொகை -18-

1. புலிப் பாய்த்துள் (புலி போலப் பாய்தல்) – வினை-உவமை
2. மழை வண்கை (மழை போல வண்கை) – பயன்-உவமை
3. துடி நடு (துடி போல இடுப்பு) – மெய்-உவமை (வடிவ-உவமை)
4. முத்த முறுவல் ((முத்துப் போன்ற சிரிப்பு) – உருவு-உவமை (நிறம்)

வினைத்தொகை -19-
கொல்யானை
பண்புத்தொகை -20-

1. கருங்குதிரை - வண்ணம்
2. வட்டப்பலகை – வடிவம்
3. குறுங்கோலு – அளவு
4. தீங்கரும்பு – சுவை
5. தண்ணீர் – அன்ன பிற (குணம்)
6. வேழக்கரும்பு – என்ன கிளவியும் (வேழமாகிய கரும்பு) (ஒரு பொருளைக் குறிக்கும் இருசொல்)

உம்மைத்தொகை -21-

1. உவாப் பதினான்கு – இரு பெயர்க்கண் தொக்கது (உவாவும் பதினான்கும்)

2. புலி வில் கெண்டை – பலபெயர்க்கண் தொக்கது (புலியும் வில்லும் கெண்டையும்)
3. தூணிப்பதக்கு – அளவு பற்றித் தொக்கது (தூணியும் பதக்கும்)
4. பதினைந்து - எண்ணியல் பற்றித் தொக்கது (பத்தும் ஐந்தும்)
5. தொடியரை – நிறைப்பெயர்ப் பற்றித் தொக்கது (தொடியும் அரையும்)
6. பன்னிருவர் – எண்ணியற்பெயர் பற்றித் தொக்கது (பதின்மரும் இருவரும்)

அன்மொழித்தொகை -22-

1. வெள்ளாடை வந்தான் – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (வெள்ளை ஆடை உடுத்தவன்)
2. தகரஞாழல் வந்தாள் – உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (தகரமும் ஞாழலும் கூந்தலில் பூசிய பெண்)
3. பொற்றாலி வந்தாள் – வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை) (பொன்னாலான தாலி அணிந்தவள்)
4. அறற்கூந்தல் வந்தாள் – உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழிதொகை (ஆற்று அறல் போன்ற கூந்தலை உடையவள்)
5. திரிதாடி வந்தான் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (திரிந்த, திரியும் தாடி உடையவன்)

**தொகைச்சொல்லில் பொருள் நிற்குமிடம் -23-**

1. வேங்கைப் பூ என்னும்போது இந்தப் பூ வேங்கை என முன்மொழிமேல் பொருள் நின்றது
2. அடைகடல் என்னும்போது பின்மொழிமேல் பொருள் நின்றது (கடல் அடைந்த நிலம்)
3. குரைகடல் என்னும்போது குரைத்தல் மேலும், கடல் மேலும் பொருள் நிற்றலால் இத்தொடரில் ஒருமொழிலும் பொருள் நின்றது.
4. அன்மொழித்தொகையில் இருசொல்மீதும் பொருள் நிற்பதில்லை.

தொகைச்சொல் ஒருசொல் நடை கொள்ளும் -24-
உயர்திணையில் வரும் உம்மைத்தொகை பலசொல் நடைத்து. -25-
கபில பரணர் (கபிலரும் பரணரும்)

**சொல் வேறு, குறிப்பு வேறு**

குறிப்புரை -26-

1. நான் செல்லும்பொது மலை வந்தது – முள் குத்திற்று – இவை வாரா மரபினை வந்ததாகக் கூறல்.
2. நிலம் வல்லென்றது – நிலத்தின் இயல்பு கெட்டியாதல். இதனை அது செய்த்தாகக் கூறல் ‘என்னா மரபின எனக் கூறுதல்’

**அடுக்குத்தொடர்**

இசைப்பொருளை நான்குமுறை அடுக்கலாம் -27-
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
விரைசொல்லை மூன்றுமுறை அடுக்கலாம் -28-
தீத் தீத் தீ
இரண்டுமுறை அடுக்குவன -29, 30-

- கண்டீரோ கண்டீரோ
- கொண்டீரோ கொண்டீரோ
- சென்றதே சென்றதே
- போயிற்றே போயிற்றே – தொடக்கத்தன.
- கேட்டை கேட்டை
- நின்றை நின்றை
- காத்தை காத்தை
- கண்டை கண்டை

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலம் மூன்று
தன்மை முன்னிலை படர்க்கை என இடம் மூன்று
வினைமுற்று, வினைக்குறிப்பு என முற்று இரண்டு -31-

வினைமுற்று இந்த இரண்டு வகையில் அமையும் -32-
அடுக்கும் இந்த இருவகையில் அமையும் -33-

1. உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் வந்தான்.
2. சொல்வலன் சோர்விலன் அஞ்சான்

**எச்சம்**

எச்சம் 10 வகை -34-

1. பிரிநிலை எச்சம்
2. வினையெச்சம்
3. பெயரெச்சம்
4. ஒழியிசை எச்சம்
5. எதிர்மறை எச்சம்
6. உம்-எச்சம்
7. என-எச்சம்
8. சொல்லெச்சம்
9. குறிப்பெச்சம்
10. இசையெச்சம்

பிரிநிலை எச்சம் 2 வகை -35-

1. அவனே வந்தான் – பிரிநிலை எகாரம்
2. அவனோ வந்தான் – பிரிநிலை ஓகாரம்

வினையெச்சம் 2 வகை -36-

1. உழுது வந்தான் – தெரிநிலை வினைமுற்று கொண்டு முடிந்தது
2. உழுது வருதல், உழுது வந்தவன் – குறிப்பு வினைமுற்று கொண்டு முடிந்தது

பெயரெச்சம் பெயர் கொண்டு முடியும் -37-
உண்ணும் சாத்தன், உழுத எருது
ஒழியிசை எச்சம் -38-

- கூரியதோர் வாள்மன் – வாள் ஒழிக்கும் என்னும் இசைப்பு எஞ்சி நின்றது
- வருகதில் கொண்கன் – வரட்டும் பார்த்துக்கொள்கிறேன்
- கொளலோ கொண்டான் – வாங்கியது மட்டுமா செய்தான்

எதிர்மறை எச்சம் -39-
யானோ கொண்டேன் – நான் கொள்ளவில்லை என்பது பொருள்.
உம்மை எச்சம் -40-
சாத்தனும் வந்தான் என்றால் கொற்றன் முனபே வந்தான் என்னும் பொருள் தொக்கி நின்றது.
செஞ்சொல் உம்மை எச்சம் -41-
உழுது உண்பான் – உழுது சோறு உண்பான் (சோறு என்னும் செஞ்சொல் தொக்கு நின்றது
என என்னும் எச்சம் வினை கொண்டு முடியும் -42-
கொள்ளெனக் கொண்டான்
ஏனைய எச்சங்களுக்கு முடிபு வரையறை இல்லை -43-
குறிப்பு எச்சம் -44-
விண்ணென விசைத்தது வில் – ‘விண்’ என்பது குறிப்புச்சொல்
சொல்லெச்சம் -45-
பசித்தேன் என்றவழி, பழஞ்சோறு தா என்பது சொல்லெச்சம்.

**மறைக்கும் சொல்**

அவையல் கிளவி (பலர்முன் சொல்லக்கூடாத சொல்) -46-
கால்மேல் நீர் பெய்தும் (= மலம் கழுவு)
மறைக்கும்போது மரூஉச்சொல்லைப் பயன்படுத்துக -47-
ஆட்டுப் பிழுக்கை, ஆப்பீ – இவை மரூஉச்சொற்கள்

**மூவிடச்சொல், வரையறை**

ஈ, தா, கொடு – இந்த மூன்னறு இரத்தலைக் குறிக்கும் சொற்கள் -48-
தாழ்ந்தவன் உயர்ந்தவனிடம் ‘ஈ’ என்பான் -49-

ஒத்தவனிடம் ‘தா’ என்பான் -50-
உயர்ந்தவன் நாழ்ந்தவனிடம் ‘கொடு’ என்பான் -51-
கொடு என்னும் சொல்லை அவனுக்குக் கொடு என்று படர்க்கைப் பொருளில்தான் பயன்படுத்த வேண்டும். என்றாலும் தனைப் பிறன் பொல் பாவித்துக் கூறும்போது எனக்குக் கொடு என்றும் வரும் -52-

## இலக்கணத்தில் கட்டுப்படாத மொழி வரவு

இலக்கணத்தில் கட்டுப்படாத வரவுகள் ஏற்கப்படும் -53-

- பெயர் சூட்டல் – ஓர் எருதை நம்பி என்றும், ஒரு கிளியை நங்கை என்றும் அழைத்தல்
- திசைச்சொல் – ஒருவனைப் புலியான் என்றும், பூசையான் என்னும் வழங்குதல்
- தொன்னெறியான் வரும் பழமொழி – யாற்றுள் செத்த எருமை ஈர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன்
- மெய்ந்நெறி மயக்கம் – சுடுகாட்டை நன்காடு எனல், செத்தாரைத் துஞ்சினார் எனல்
- மந்திரம் – திரிதிரி சவாகா, கன்று கொண்டு கறவையும் வந்திக்க சுவாகா (இளம்பூரணர் காட்டு)

செய்யாய் என்னும் முன்னிலைக் கிளவி ஏவலாகவும் வரும் -54-
உண்ணாய்
முன்னிலை ஈறு -55-
ஈ ஈறு – புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ
2. மே ஈறு – அட்டிலோளைத் தொட்டனை நின்மே கடிசொல் இல்லை காலத்துப் படினே -56-
சம்பு, சட்டி போன்ற ச-முன்மொழி வரவு
குறைசொற்களை அறிந்து நிறைசொற்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் -57-

- மரை இதழ் புரையும் அஞ் செஞ் சீறடி – தாமரை என்பது மரை என நின்றது – தலைக்குறை
- வெரிநின் ஓதி வெருக் கண்டன்ன – ஓந்தி என்பது ஓதி என நின்றது – இடைக்குறை
- நீல் உண் துகிலிகை கடுப்ப – நீலம் என்பது நீல் என நின்றது – கடைக்குறை

வேற்றுமை உருபு அல்லாத இடைச்செற்களைப் பெயரை வேறுபடுத்தும் வேற்றுமைச்சொல் என்றே கொள்ளுதல் வேண்டும் -58-
உரிச்சொற்களிலும் பொருளை வேறுபடுத்தும் வேற்றுமைச்சொல் உண்டு -59-
வினையெச்சத்தில் திரிபு நிகழும் -60-

- ஞாயிறு பட்டு வந்தான் – ஞாயிறு பட(மறைய) வந்தான் என்பது ‘பட’ என்னும் ‘செய்து’ என்னும் எச்சம்
- ‘ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால்’ என்னும் திருக்குறளில் குன்றியக்கால் என்பது குன்றிக்கால் என வந்தது
- கோழி கூவப் பொழுது விடிந்தது – இதில் கூவி என வரவேண்டிய செய்து என்னும் எச்சம் கூவ என, செய என்னும் எச்சமாக வந்தது.
- மோயினள் உயிர்த்தகாலை – இதில் மோயினள் என்பது முற்றெச்சம்

உரையிடத்து உடனிலைப் பொருளை உணர்ந்துகொள்ள வேண்டும் -61-
இந்த நாழிக்கு இந்த நாழி பெரிது
சில சொற்களை முன்னத்தால் உணர்ந்தகொள்ள வேண்டும் (முன்னம் = உய்த்துணர்வு) -62-
குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் – என்னும்போது செல்வ வளம் மிக்கவர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.
ஒரு பொருள்மேல் இரண்டு தொடர் வந்தால் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்கக் கூடாது -63-
வையைக்கு இறைவன், கூடலர் கோ வந்தான்.
ஒருமை சுட்டிய பெயர் பன்மையை உணர்த்தும் -64-
ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப – இதில் இளையர் என்னும் பன்மை தாய் என்னும் ஒருமையைப் பன்மையாக்கிக் காட்டிற்று.

## ஆற்றுப்படை நூலில் ஒருமை பன்மை மயக்கம்

ஆற்றுப்படை நூலில் ஒருமை பன்மை மயக்கம் நிகழ்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் -65-
கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ (ஒருமை) … ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின் (பன்மை)
சொற்களைச் செய்யுளில் வருபவை என்றும், வழக்கில் வருபவை என்றும் பாகுபடுத்தி பிழையின்றி உணர்ந்துகொள்ள வேண்டும் .67

## எச்சவியல் நூற்பாக்கள்

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. 1

அவற்றுள்,
இயற்சொல்தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி
தம் பொருள் வழாமை இசைக்கும் சொல்லே. 2

ஒரு பொருள் குறித்த வேறு சொல் ஆகியும்
வேறு பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்
இரு பாற்று என்ப திரிசொல் கிளவி. 3

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம் குறிப்பினவே திசைச்சொல் கிளவி. 4

வடசொல் கிளவி வட எழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே. 5

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார். 6

அந் நாற் சொல்லும் தொடுக்கும் காலை
வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும் வழி மெலித்தலும்
விரிக்கும் வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்
நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும் வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர். 7

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவை நான்கு என்ப மொழி புணர் இயல்பே. 8

அவற்றுள்,
நிரல்நிறைதானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றி
சொல் வேறு நிலைஇ பொருள் வேறு நிலையல். 9

சுண்ணம்தானே
பட்டாங்கு அமைந்த ஈர் அடி எண் சீர்
ஒட்டு வழி அறிந்து துணித்தனர் இயற்றல். 10

அடிமறிச் செய்தி அடி நிலை திரிந்து
சீர் நிலை திரியாது தடுமாறும்மே. 11

பொருள் தெரி மருங்கின்
ஈற்று அடி இறு சீர் எருத்துவயின் திரியும்
தோற்றமும் வரையார் அடிமறியான. 12

மொழிமாற்று இயற்கை
சொல் நிலை மாற்றி பொருள் எதிர் இயைய
முன்னும் பின்னும் கொள் வழிக் கொளாஅல். 13

த ந நு எ எனும் அவை முதல் ஆகிய
கிளை நுதற் பெயரும் பிரிப்பப் பிரியா. 14

இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல் என்று
அவை மூன்று என்ப ஒரு சொல் அடுக்கே. 15

வேற்றுமைத்தொகையே உவமத்தொகையே
வினையின்தொகையே பண்பின்தொகையே
உம்மைத்தொகையே அன்மொழித்தொகை என்று
அவ் ஆறு என்ப தொகைமொழி நிலையே. 16

அவற்றுள்,
வேற்றுமைத்தொகையே வேற்றுமை இயல. 17

உவமத்தொகையே உவம இயல. 18

வினையின்தொகுதி காலத்து இயலும். 19

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்னது இது என வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின்தொகையே. 20

இரு பெயர் பல பெயர் அளவின்பெயரே
எண்ணியற்பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின்பெயரொடு அவ் அறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத்தொகையே. 21

பண்பு தொக வரூஉம் கிளவியானும்
உம்மை தொக்க பெயர்வயினானும்
வேற்றுமை தொக்க பெயர்வயினானும்
ஈற்று நின்று இயலும் அன்மொழித்தொகையே. 22

அவைதாம்,
முன் மொழி நிலையலும் பின் மொழி நிலையலும்
இரு மொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம் மொழி நிலையாது அல் மொழி நிலையலும்
அந் நான்கு என்ப பொருள் நிலை மரபே. 23

எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய. 24

உயர்திணை மருங்கின் உம்மைத்தொகையே
பலர்சொல் நடைத்து என மொழிமனார் புலவர். 25

வாரா மரபின வரக் கூறுதலும்
என்னா மரபின எனக் கூறுதலும்
அன்னவை எல்லாம் அவற்று அவற்று இயல்பான்
இன்ன என்னும் குறிப்புரை ஆகும். 26

இசைப் படு பொருளே நான்கு வரம்பு ஆகும். 27

விரை சொல் அடுக்கே மூன்று வரம்பு ஆகும். 28

கண்டீர் என்றா கொண்டீர் என்றா
சென்றது என்றா போயிற்று என்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்ற வழி அசைக்கும் கிளவி என்ப. 29

கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை அல் வழி
முன்னுறக் கிளந்த இயல்பு ஆகும்மே. 30

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
சிறப்புடை மரபின் அம் முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம் மூ இடத்தான் வினையினும் குறிப்பினும்
மெய்ம்மையானும் இவ் இரண்டு ஆகும்
அவ் ஆறு என்ப முற்று இயல் மொழியே. 31

எவ் வயின் வினையும் அவ் இயல் நிலையும். 32

அவைதாம்,
தம்தம் கிளவி அடுக்குந வரினும்
எத் திறத்தானும் பெயர் முடிபினவே. 33

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீர் ஐந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சு பொருட் கிளவி. 34

அவற்றுள்,
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின. 35

வினையெஞ்சுகிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபு ஆகும்மே
ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே. 36

பெயரெஞ்சுகிளவி பெயரொடு முடிமே. 37

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின. 38

எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின. 39

உம்மை எச்சம் இரு ஈற்றானும்
தன் வினை ஒன்றிய முடிபு ஆகும்மே. 40

தன்மேல் செஞ்சொல் வரூஉம் காலை
நிகழும் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலையான. 41

என என் எச்சம் வினையொடு முடிமே. 42
எஞ்சிய மூன்றும் மேல் வந்து முடிக்கும்

எஞ்சு பொருட் கிளவி இல என மொழிப. 43

அவைதாம்,
தம்தம் குறிப்பின் எச்சம் செப்பும். 44

சொல் என் எச்சம் முன்னும் பின்னும்
சொல் அளவு அல்லது எஞ்சுதல் இன்றே. 45

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல். 46

மறைக்கும் காலை மரீ இயது ஒராஅல். 47

ஈ தா கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகு இடன் உடைய. 48

அவற்றுள்,
ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே. 49

தா என் கிளவி ஒப்போன் கூற்றே. 50

கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே. 51

கொடு என் கிளவி படர்க்கை ஆயினும்
தன்னைப் பிறன் போல் கூறும் குறிப்பின்
தன்னிடத்து இயலும் என்மனார் புலவர். 52

பெயர்நிலைக் கிளவியின் ஆஅகுநவும்
திசைநிலை கிளவியின் ஆஅகுநவும்
தொல் நெறி மொழிவயின் ஆஅகுநவும்
மெய்ந் நிலை மயக்கின் ஆஅகுநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்
அன்றி அனைத்தும் கடப்பாடு இலவே. 53

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய் என் கிளவி ஆகு இடன் உடைத்தே. 54

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந் நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே. 55

கடி சொல் இல்லை காலத்துப் படினே. 56

குறைச்சொற் கிளவி குறைக்கும் வழி அறிதல். 57

குறைத்தன ஆயினும் நிறைப் பெயர் இயல. 58

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே. 59

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய. 60

வினையெஞ்சுகிளவியும் வேறு பல் குறிய. 61

உரையிடத்து இயலும் உடனிலை அறிதல். 62

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன என்னும் சொல் முறையான. 63

ஒரு பொருள் இரு சொல் பிரிவு இல வரையார். 64

ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி
பன்மைக்கு ஆகும் இடனுமார் உண்டே. 65

முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரை நிலை இன்றே
ஆற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும். 66

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய் பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல் வேறு செய்தியின் நூல் நெறி பிழையாது
சொல் வரைந்து அறிய பிரித்தனர் காட்டல். 67